1973 நவம்பர் 30]

மதுரை மாவட்டத்தில் நைலான் தொழிற்சாலை.

***518 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் 13—12—1972 அன்று, வினா எண் 155-க்கு அளித்த விடையையொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் நைலான் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்நிய தொழில் நுட்ப உதவி பெறவும் வெளிநாட்டிலிருந்து இயந்திரங்கள் இறக்குமதி செய்யவும் மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: நைலான் தொழிற்சாலை மதுரையில் எந்த இடத்தில் துவக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? மொத்தத்தில் முதலீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இன்னும் இதுபற்றி இறுதியான முடிவு எடுக்கப்படவில்லை. மத்திய அரசு இதுபோன்று நைலான் தொழிற்சாலை அமைப்பதுபற்றி இந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்து கொண்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தற்பொழுது இந்த நைலான், செயற்கை நூலான ஆடைகளைத்தான் மக்கள் பெரிதும் விரும்பி அணிகிறார்கள். இதனால் வேறு மாநிலங்களிலிருந்து அதிகமாக நைலான் துணிகள் உற்பத்தியாகி நம்முடைய மாநிலத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. ஆகவே, நம்முடைய மாநிலத்திலிருந்து பெரும் பகுதி பணங்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்றுவிடுகின்றன. எனவே, நமது மாநிலத்திலேயே இந்தத் தொழிலை இன்னும் அதிகமாக அபிவிருத்தி செய்வதற்கு மதுரை, கோவை போன்ற இடங்களில் இம்மாதிரி ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மதுரைக்கு ஆபத்தாக இருக்கிறது. அவர்கள் சொல்லிய, துணிக்காகச் சொல்லிய விளக்கத்தோடு கூட, இப்பொழுது இருக்கிற தொழிற்சாலைகள் தனியார் துறையிலே இருக்கின்றன. ஆகவே, பொதுத் துறையிலே இது போன்ற மூலப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை

ஏற்படுத்த அனுமதிக்கவேண்டும் என்ற கொள்கையை நம்முடைய மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. ஆகவே, அரசாங்கத்தின் சார்பிலே இந்தத் தொழிலை நடத்துவதற்கான திட்டத்திற்கு அனுமதி கேட்டிருக்கிறோம். அனுமதி கொடுத்துவிட்டு, இப்பொழுது மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது. இதுதான் தொழில் கொள்கையிலே நாம் படுகின்ற சிரமம்.

திரு. அ. தேவேந்திரன் : தொழில் துறையில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள மதுரை மாவட்டத்தில் இப்படிப்பட்ட தொழிற்சாலை துவங்குவதை விட்டுவிட்டு, பின்தங்கிய மாவட்டமான தஞ்சை மாவட்டத்தில் அமைப்பதற்கான உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதுரைக்கே ஆபத்து என்றேன்.

Petro-Chemical Industry at Tuticorin

* 519 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a Petro-chemical Complex at Tuticorin; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த பெட்ரோ-கெமிக்கல் இண்டஸ்டிரீஸ் மூலம் கிடைக்கின்ற பிளாஸ்டிக் பொருட்கள் இனி மேல் நமக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. இரும்புக்குப் பதிலாக இதையே பல இடங்களில் பயன்படுத்தக்கூடிய நிலைமை இருப்பதால், இத்தொழிலை அபிவிருத்தி செய்ய சர்க்காரிடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழகத்தைப் பொறுத்த வரையில் மூலப்பொருட்கள் குறைவாக இருப்பதால் பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலைகளை அதிகமாகத் துவக்குவதற்கு மத்திய அரசுக்கு இந்த அரசு தெரிவித்திருக்கிறது. மெட்ராஸ் ரீபைனரீஸை ஒட்டி, நாப்தாவிலிருந்து கிராக்கர் போட்டு, அதன்மூலம்